129/DD/20

T.C-144

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

# THE CRIMINAL JUDICIAL TEST PART – III THE INDIAN EVIDENCE ACT

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

NB : **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answer all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Evidence must be confined to

(A) The matter in issue
(B) The evidence in issue
(C) Hearing in issue
(D) Fear in issue

எதைக் குறித்து மட்டும் சாட்சியம் இருக்க வேண்டும்

(A) பிரச்சனையில் உள்ள பொருள்
(B) சாட்சியத்தில் உள்ள பொருள்
(C) செவி வழியில் உள்ள பொருள்
(D) பயத்தில் உள்ள பொருள்

2. The main principles which underlie the law of evidence are

(A) Three principles
(B) Four principles
(C) Five principles
(D) Six principles

சாட்சியச் சட்டம் கொண்டிருக்கும் முதன்மையான நெறிமுறைகள் மொத்தம்

(A) மூன்று கருத்துக்கள்
(B) நான்கு கருத்துக்கள்
(C) ஐந்து கருத்துக்கள்
(D) ஆறு கருத்துக்கள்

3. The following whose draft became the Indian Evidence Act?

(A) Henry Sumner
(B) Henry Main
(C) Sir James Fits Stephen
(D) Lord Macaulay

பின்வரும் யாருடைய மசோதா இந்திய சாட்சிய சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது?

(A) ஹென்றி சம்நர்
(B) ஹென்றி மெய்ன்
(C) சர் ஜேம்ஸ் பிட்ஸ் ஸ்டீபன்
(D) மெக்காலே பிரபு

4. The word 'evidence' is derived from which language?

(A) Latin
(B) Sanskrit
(C) Tamil
(D) Marathi

சாட்சியம் என்ற பதம் எந்த மொழியில் இருந்து மருவியது?

(A) இலத்தின்
(B) சமஸ்கிருதம்
(C) தமிழ்
(D) மராத்தி

5. The law of evidence is a/an

(A) Adjective law
(B) Criminal law
(C) Family law
(D) Court law

சாட்சிய சட்டம் என்பது

(A) பெயரடை நடைமுறைச் சட்டம்
(B) குற்றச் சட்டம்
(C) குடும்பச் சட்டம்
(D) நீதிமன்ற சட்டம்

6. The Evidence Act is called as

(A) The Bharath Evidence Act
(B) Hindustan Evidence Act
(C) The Indian Evidence Act
(D) The Hindu Evidence Act

சாட்சிய சட்டம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) பாரத சாட்சிய சட்டம்
(B) இந்துஸ்தான் சாட்சிய சட்டம்
(C) இந்திய சாட்சிய சட்டம்
(D) இந்து சாட்சிய சட்டம்

7. The Evidence Act came into force on

(A) 5 September 1872
(B) 1 September 1872
(C) 3 September 1872
(D) 2 September 1872

சாட்சிய சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்

(A) 5 செப்டம்பர் 1872
(B) 1 செப்டம்பர் 1872
(C) 3 செப்டம்பர் 1872
(D) 2 செப்டம்பர் 1872

8. All persons legally authorised to take evidence is called as

(A) Arbitrator
(B) Tribunal
(C) Court
(D) Witness

சட்டப்படி சாட்சியம் எடுக்க அதிகாரமளிக்கப்பட்ட அனைத்து நபர்களையும் என்னவென்று அழைக்கலாம்

(A) தீர்ப்பாயர்
(B) தீர்ப்பாயம்
(C) நீதிமன்றம்
(D) சாட்சியர்

9. Fact is defined u/s

(A) S. 1 (B) S. 2

(C) S. 3 (D) S. 4

பொருண்மையினை வரையறை செய்யும் பிரிவு

(A) பிரிவு 1 (B) பிரிவு 2

(C) பிரிவு 3 (D) பிரிவு 4

10. Relevancy of facts forming part of same transaction known as

(A) Rus gestae (B) Res gestae

(C) Risk gestae (D) None of these

ஒரே நடவடிக்கையின் பகுதியாக அமையும் பொருண்மைகளின் தொடர்புடைமையினை எவ்வாறு தெரிந்துகொள்ளலாம்?

(A) ரஸ் கெஸ்டே (B) ரெஸ் கெஸ்டே

(C) ரிஸ்க் கெஸ்டே (D) மேற்கூறிய எதுவுமில்லை

11. Things said or done by conspirator in reference to

(A) Individual design (B) Common design

(C) Court design (D) Advocate design

சதி செய்பவரால் பேசப்பட்ட (அ) செய்யப்பட்டவைகளைப் பற்றிக் குறிப்பது

(A) தனி திட்டம் (B) பொது திட்டம்

(C) நீதிமன்ற திட்டம் (D) வழக்கறிஞர் திட்டம்

12. Plea of Alibi comes under Section

(A) S. 9 (B) S. 10

(C) S. 11 (D) S. 12

வேற்றிட வாதம் குறித்த பிரிவு

(A) பிரிவு 9 (B) பிரிவு 10

(C) பிரிவு 11 (D) பிரிவு 12

13. Which of the following customs, is/are recognised u/s 13?

(A) Public custom (B) Private custom

(C) General custom (D) All the above

பிரிவு 13-ன் கீழ் பின்வரும் எந்த வழக்காறு(கள்) அங்கீகரிக்கப்பட்டவை?

(A) பொது வழக்காறுகள் (B) தனியர் வழக்காறுகள்

(C) பொதுவான வழக்காறுகள் (D) மேற்கண்ட அனைத்தும்

14. Facts showing existence of state of mind or of body, or bodily feeling are

(A) relevant (B) irrelevant

(C) Both (A) and (B) (D) None of the above

மனநிலை (அ) உடல்நிலை (அ) உடலியல் உணர்வு நிலை இருப்பதாகக் காட்டும் பொருண்மைகள்

(A) தொடர்புடையது (B) தொடர்பில்லாதது

(C) (A) மற்றும் (B) (D) மேற்கண்ட எதுவுமில்லை

15. Accidental or intentional act is explained u/s

(A) S. 15 (B) S. 14

(C) S. 13 (D) S. 12

தற்செயல் (அ) உட்கருத்துகொண்ட செயலைப் பற்றி விளக்கும் பிரிவு

(A) பிரிவு 15 (B) பிரிவு 14

(C) பிரிவு 13 (D) பிரிவு 12

16. Admission is defined u/s

(A) S. 15 (B) S. 16

(C) S. 17 (D) S. 18

ஏற்புரையினை வரையறை செய்யும் பிரிவு

(A) பிரிவு 15 (B) பிரிவு 16

(C) பிரிவு 17 (D) பிரிவு 18

17. S. 18 lays down how many classes of persons who can make admissions?

(A) Two classes of persons

(B) Three classes of persons

(C) Four classes of persons

(D) Five classes of persons

பிரிவு - 18 எத்தனை வகையான நபர்கள் ஏற்புரையினை அளிக்கலாம் என்று வகுத்துரைக்கிறது?

(A) இரண்டு வகையான நபர்கள்

(B) மூன்று வகையான நபர்கள்

(C) நான்கு வகையான நபர்கள்

(D) ஐந்து வகையான நபர்கள்

18. Unless the genuiness of the electronic record produced is in question, the oral admissions as to the contents of the electronic records is/are

(A) Not relevant

(B) Relevant

(C) Relevant and Irrelevant

(D) All the above

முன்னிலைப்படுத்தப்பட்ட மின்னணு பதிவேட்டின் உண்மைத் தன்மை குறித்து வினா இருந்தாலன்றி, மின்னணுப் பதிவேடுகளின் உள்ளடக்கங்கள் குறித்து வாய்மொழி ஏற்புரைகள்

(A) தொடர்பற்றது

(B) தொடர்புடையது

(C) தொடர்புடையது மற்றும் தொடர்பற்றது

(D) மேற்கூறிய அனைத்தும்

19. As per S. 23 in which cases no admission is relevant if it is made upon an express condition that evidence of it is not to be given?

(A) Criminal cases

(B) Civil cases

(C) Foreign cases

(D) All the cases

பிரிவு - 23-ன்படி எந்த வழக்குகளில் வெளிப்படையான நிபந்தனைகளின் அடிப்படையில் அளிக்கப்படும் ஏற்புரைகள் தொடர்புடையது அன்று?

(A) குற்றவியல் வழக்குகள்

(B) உரிமையியல் வழக்குகள்

(C) அயல்நாட்டு வழக்குகள்

(D) அனைத்து வழக்குகளும்

20. A confession made before a magistrate is a

(A) Judicial confession

(B) Extra Judicial confession

(C) Tribunal confession

(D) None of the above

குற்ற நடுவர் ஒருவர் முன்பு கொடுக்கப்படும் ஏற்புரையானது ஒரு

(A) நீதிமுறை குற்ற ஏற்புரை

(B) நீதிமுறைக்கு அப்பாலான குற்ற ஏற்புரை

(C) தீர்ப்பாய குற்ற ஏற்புரை

(D) மேற்கண்ட எதுவுமில்லை

21. Which of the following is/are relevant rules as to the criminal confession?

(A) To be accepted as a whole

(B) To be rejected as a whole

(C) To be accepted or rejected as a whole

(D) None of the above

குற்ற ஏற்புரை குறித்த விதிமுறைகளின்படி பின்வரும் எவை(கள்) பொருத்தமானது?

(A) முழுமையாக ஏற்கப்பட வேண்டும்

(B) முழுமையாக தள்ளுபடி செய்யபட வேண்டும்

(C) முழுமையாக ஏற்கப்பட வேண்டும் (அ) தள்ளுபடி செய்யப்பட வேண்டும்

(D) மேற்கூறிய எதுவுமில்லை

22. Confession made to whom shall not be proved as against the accused person?

(A) Police Officer

(B) Judicial Officer

(C) Magistrate

(D) Advocate

யாரிடம் கொடுக்கப்பட்ட குற்ற ஏற்புரையினை குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மெய்பிக்கப்பட வேண்டியதில்லை?

(A) காவல் அலுவலர்

(B) நீதித்துறை அலுவலர்

(C) குற்றவியல் நடுவர்

(D) வழக்கறிஞர்

23. On whose immediate presence, confessional statement made by an accused shall be proved?

(A) Magistrate (B) CJM

(C) Sessions Judge (D) All the above

யாருடைய நேரடி முன்னிலையில் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரையினை குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மெய்பிக்கலாம்?

(A) குற்ற நடுவர் (B) முதன்மை குற்ற நடுவர்

(C) அமர்வு நீதிபதி (D) மேற்கண்ட அனைத்தும்

24. Which of the following case the Supreme Court laid down the guidelines regarding Extra Judicial Confessions as admissible?

(A) Muniappan Vs. State of T.N.

(B) Sahadevan Vs. State of T.N.

(C) Jai Narain Vs. State of Rajasthan

(D) Sanjay Goel Vs. State of U.P.

நீதிமுறை சாரா குற்ற ஏற்புரையினை ஏற்பது குறித்த விதிமுறையினை பின்வரும் எந்த வழக்கில் உச்சநீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) முனியப்பன் எதிர் தமிழக அரசு

(B) சகாதேவன் எதிர் தமிழக அரசு

(C) ஜெய்நாராயன் எதிர் நாராயன் அரசு

(D) சஞ்சய் கோயல் எதிர் உத்திரப் பிரதேச அரசு

25. Confession made after removal of impression caused by ———— relevant.

(A) Inducement (B) Threat

(C) Promise (D) All the above

பின்வரும் எவை நீங்கிய பிறகு கூறப்படும் குற்ற ஏற்புரை தொடர்புடையது

(A) தூண்டுதல் (B) அச்சுருத்தல்

(C) உறுதியுரை (D) மேற்கூறிய அனைத்தும்

26. When confession does not become irrelevant because it was made under ————.

(A) a promise of secrecy

(B) a promise of bribe

(C) a promise of illegal act

(D) none of the above

பின்வரும் எந்த சூழ்நிலையில் குற்ற ஏற்புரை கொடுக்கப்பட்டிருந்தால் தொடர்பற்றதாக ஆகாது?

(A) இரகசிய உறுதியுரையின் கீழ்

(B) கையூட்டு உறுதியுரையின் கீழ்

(C) சட்டத்திற்கு புரம்பான உறுதியுரையின் கீழ்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

27. Which of the following statement is/are correct U/S. 30 regarding confessional statement against the another co-accused relevant?

(A) if both of them are tried jointly

(B) if they are tried for the same offence

(C) if the confession is legally proved

(D) all the above

பிரிவு 30-ன் கீழ் பின்வரும் எந்த கருத்து ஒரு குற்றவாளியின் குற்ற ஏற்புரை மற்ற கூட்டு குற்றவாலிக்கு எதிராக தொடர்புடையதாகும்?

(A) இருவரும் கூட்டாக விசாரிக்கப்பட்டால்

(B) இருவரும் ஒரே குற்றத்திற்க்காக விசாரிக்கப்பட்டால்

(C) குற்ற ஏற்புரையானது சட்டப்படி மெய்பிக்கப்பட்டிருந்தால்

(D) மேற்கூறிய அனைத்தும்

28. Admissions may operate as ————

(A) Estoppel

(B) Res Judicata

(C) Lis Pendans

(D) Precedents

ஏற்புரையானது எவ்வாராக செயல்படலாம்?

(A) முதல் தடை

(B) முன் தீர்ப்பு தடை

(C) நிலுவை வழக்கு

(D) முன்தீர்ப்பு நெறி

29. As per S. 32, whose statements are relevant?

(A) A person who is dead

(B) A person who cannot be found

(C) A person who has become incapable of giving evidence

(D) All the above

பிரிவு 32ன் படி பின்வரும் யாருடைய உரைகள் தொடர்புடையது?

(A) இறந்த போன நபர்

(B) கண்டுபிடிக்கப்பட முடியாத நபர்

(C) சாட்சியம் அளிக்க திறனற்று போய்விட்டவர்

(D) மேற்கண்ட அனைத்தும்

30. Dying declaration explained under Section

(A) S. 30

(B) S. 32

(C) S. 31

(D) S. 33

மரண வாக்குமூலத்தினை விளக்கும் பிரிவு

(A) பிரிவு 30

(B) பிரிவு 32

(C) பிரிவு 31

(D) பிரிவு 33

31. Which of the following, sections deals with statements made under special circumstances?

(A) S. 34–38

(B) S. 35–38

(C) S. 36–38

(D) S. 37–38

பின்வரும் எந்த பிரிவுகள் சிறப்புச் சூழ்நிலைகளில் செய்யப்பட்ட உரைகளைப் பற்றி குறிப்பிடுகிறது?

(A) பிரிவு 34–38

(B) பிரிவு 35–38

(C) பிரிவு 36–38

(D) பிரிவு 37–38

32. Which Section deals with the relevancy of entry in public record or an electronic record made in performance?

(A) S. 34
(B) S. 35
(C) S. 36
(D) S. 37

கடமை ஆற்றுகையில் செய்யப்பட்ட பொதுப் பதிவேடு அல்லது மின்னணு பதிவேட்டில் உள்ள குறிப்பின் தொடர்புடைமையினை குறிப்பிடும் பிரிவு எது?

(A) பிரிவு 34
(B) பிரிவு 35
(C) பிரிவு 36
(D) பிரிவு 37

33. Section 36 deals with relevancy of statements in ——————

(A) Maps
(B) Charts
(C) Plans
(D) All the above

பிரிவு 36-ல் குறிப்பிடப்படும் தொடர்புடைய உரைகள் எவை?

(A) வரைபடங்கள்
(B) விளக்கப்படங்கள்
(C) திட்டங்கள்
(D) மேற்கண்ட அனைத்தும்

34. Relevancy of statements as to any law contained in —————— books.

(A) Social book
(B) Law book
(C) Mathematic Book
(D) History book

எந்த நூலில் அடங்கியுள்ள ஏதாவது ஒரு சட்டம் குறித்த உரை தொடர்புடையதாகும்?

(A) சமுதாய நூல்
(B) சட்ட நூல்
(C) கணித நூல்
(D) சரித்திர நூல்

35. Which Judgements are relevant to ban a second suit or trial?

(A) Current Judgements
(B) Previous Judgements
(C) Foreign Court Judgements
(D) All the above

எந்த தீர்ப்புகள் இரண்டாவது உரிமை வழக்கு (அ) விசாரணையைத் தடை செய்ய தொடர்புடையவையாகும்?

(A) நடப்பு தீர்ப்புகள்
(B) முந்தைய தீர்ப்புகள்
(C) அயல்நாட்டு நீதிமன்ற தீர்ப்புகள்
(D) மேற்கண்ட அனைத்தும்

36. Which of the following sections deals with relevancy of judgements of Courts of Justice?

(A) S. 39–44 (B) S. 38–43

(C) S. 40–44 (D) S. 40–43

பின்வரும் எந்த பிரிவுகள் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் தொடர்புடைமைப் பற்றி குறிப்பிடுகிறது?

(A) பிரிவு 39–44 (B) பிரிவு 38–43

(C) பிரிவு 40–44 (D) பிரிவு 40–43

37. Which of the following grounds a judgement in rem can be impeached?

(A) Court has no jurisdiction

(B) Judgement was obtained by fraud

(C) It was not given on merits

(D) All the above

அனைவரையும் கட்டுப்படுத்தும் தீர்ப்பை பின்வரும் எந்தக் காரணங்களின் அடிப்படையில் எதிர்க்கலாம்?

(A) நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு கிடையாது

(B) மோசடியினால் பெறப்பட்ட தீர்ப்புகள்

(C) தகுதியின் அடிப்படையில் இல்லாத தீர்ப்புகள்

(D) மேற்கண்ட அனைத்தும்

38. Which of the following Sections deals with the relevancy of opinions of third persons?

(A) S. 45–51 (B) S. 44–51

(C) S. 43–51 (D) S. 45–52

பின்வரும் எந்த பிரிவுகள் மூன்றாம் நபர்களின் கருத்துக்கள் தொடர்புடைமைப் பற்றிக் குறிப்பிடுகிறது?

(A) பிரிவு 45–51 (B) பிரிவு 44–51

(C) பிரிவு 43–51 (D) பிரிவு 45–52

39. S. 45 deals with ————

(A) Opinion of Advocate (B) Opinion of Judge

(C) Opinion of Experts (D) Opinion of Court

பிரிவு 45 குறிப்பிடுவது

(A) வழக்கறிஞரின் கருத்து (B) நீதிபதியின் கருத்து

(C) வல்லுநர்களின் கருத்து (D) நீதிமன்றத்தின் கருத்து

40. Opinion as to handwriting specified u/s ————

(A) S. 45 (B) S. 46

(C) S. 47 (D) S. 48

எந்த பிரிவின்கீழ் கையெழுத்து குறித்த கருத்து தொடர்புடைமை பற்றி குறிப்பிடுகிறது?

(A) பிரிவு 45 (B) பிரிவு 46

(C) பிரிவு 47 (D) பிரிவு 48

41. Section 50 deals with

(A) Opinion on relationship (B) Opinion as to usage

(C) Opinion as to customs (D) Opinion as to signature

பிரிவு 50 குறிப்பிடுவது

(A) உறவு முறை குறித்த கருத்து (B) வழக்கங்கள் குறித்த கருத்து

(C) வழக்காறுகள் குறித்த கருத்து (D) கையெழுத்து குறித்த கருத்து

42. Relevancy of character explained under

(A) S. 52–55 (B) S. 51–56

(C) S. 50–57 (D) S. 49–58

பண்புநலன் தொடர்புடைமை பற்றி விளக்கும் பிரிவுகள்

(A) பிரிவு 52–55 (B) பிரிவு 51–56

(C) பிரிவு 50–57 (D) பிரிவு 49–58

43. In which cases previous good character is relevant?

(A) Arbitral cases (B) Foreign cases

(C) Criminal cases (D) Civil cases

எந்த வழக்குகளில் முந்தைய நல்ல பண்புநலன் தொர்புடையதாகும்?

(A) தீர்ப்பாய வழக்குகள் (B) அயல் வழக்குகள்

(C) குற்றவியல் வழக்குகள் (D) உரிமையியல் வழக்குகள்

44. ———— Section explained the evidence of character or previous sexual experience not relevant in certain cases.

(A) S. 51 A (B) S. 53 A

(C) S. 52 A (D) S. 54 A

———— பிரிவு குறிப்பிட்ட வழக்குகளில் பண்புநலன் (அ) முந்தைய உடலுறவு அனுபவம் பற்றிய சாட்சியம் தொடர்புடையதல்ல என்று விளக்குகிறது.

(A) பிரிவு 51 A (B) பிரிவு 53 A

(C) பிரிவு 52 A (D) பிரிவு 54 A

45. Previous bad character not relevant except in

(A) Only in trial (B) Only in reply

(C) Only in answer (D) Only in questions

முந்தைய கெட்ட பண்பு எப்பொழுது தவிர தொடர்புடையதல்ல

(A) வழக்கு விசாரணையில் மட்டும் (B) பதிலளிக்கையில் மட்டும்

(C) பதிலில் மட்டும் (D) கேள்வியில் மட்டும்

46. Fact judicially noticeable ————

(A) need not be proved (B) need to be proved

(C) essentially to be proved (D) particularly to be proved

நீதிமுறைப்படி கவனிக்கப்படத்தக்க பொருண்மைகளை

(A) மெய்பிக்கபடத் தேவையில்லை (B) மெய்பிக்கப்பட வேண்டும்

(C) முக்கியமாக மெய்பிக்கப்பட வேண்டும் (D) குறிப்பாக மெய்பிக்கப்பட வேண்டும்

47. The Evidence Act classified into how many parts?

(A) Three (B) Four

(C) Five (D) Six

சாட்சிய சட்டத்தினை எத்தனை பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது?

(A) மூன்று (B) நான்கு

(C) ஐந்து (D) ஆறு

48. Which Section explained about the facts of which court must take judicial notice?

(A) S. 56 (B) S. 57

(C) S. 58 (D) S. 59

நீதிமன்றம் நீதிமுறைப்படி கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய பொருண்மைகள் பற்றி விளக்கும் பிரிவு எது?

(A) பிரிவு 56 (B) பிரிவு 57

(C) பிரிவு 58 (D) பிரிவு 59

49. By whom may in its discretion require the facts admitted to be proved otherwise than by such admissions?

(A) Advocate (B) Party

(C) The Court (D) Adverse party

யாரால் தனது விருப்புரிமையின்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகளை அத்தகைய ஏற்புரைகள் வாயிலாக அல்லாமல் வேறு விதமாக மெய்ப்பிக்க வேண்டும் எனக் கோரலாம்?

(A) வழக்குறைஞர் (B) தரப்பினர்

(C) நீதிமன்றம் (D) எதிர்தரப்பினர்

50. All facts, except ———— may be proved by oral evidence.

(A) Contents of Documents

(B) Electronic Records

(C) Contents of Documents or Electronic Records

(D) None of the above

———— உள்ளடக்கங்கள் தவிர அனைத்து பொருண்மைகளையும் வாய்மொழி சாட்சியம் வாயிலாக மெய்பிக்கப்படலாம்.

(A) ஆவணங்களின் உள்ளடக்கங்கள்

(B) மின்னணுப் பதிவேடுகளின் உள்ளடக்கங்கள்

(C) ஆவணங்கள் (அ) மின்னணுப் பதிவேடுகளின் உள்ளடக்கங்கள்

(D) மேற்கூறிய எதுவுமில்லை

51. Oral Evidence must be ————

(A) Indirect

(B) Direct and Indirect

(C) Circumstantial

(D) Direct

வாய்மொழி சாட்சியமானது எவ்வாறு இருக்க வேண்டும்?

(A) மறைமுகமாக

(B) நேரடி மற்றும் மறை முகமாக

(C) சூழ்நிலையாக

(D) நேரடியாக

52. The contents of documents may be proved by what evidence?

(A) Primary evidence only

(B) Secondary evidence only

(C) Either Primary or Secondary evidence only

(D) Hearsay evidence only

ஆவணங்களின் உள்ளடக்கங்களை எந்த சாட்சியத்தின்படி மெய்பிக்கலாம்?

(A) முதல் நிலை சாட்சியம் மட்டும்

(B) இரண்டாம் நிலை சாட்சியம் மட்டும்

(C) முதல் நிலை (அ) இரண்டாம் நிலை சாட்சியத்தால் மட்டும்

(D) செவிவழி சாட்சியத்தால் மட்டும்

53. Which Section deals with admissibility of electronic records?

(A) S. 65 B
(B) S. 65 C
(C) S. 65 D
(D) S. 65 E

எந்த பிரிவு மின்னணுப் பதிவேடுகளின் ஏற்புத் தன்மையினைப் பற்றி குறிப்பிடுகிறது?

(A) பிரிவு 65 B
(B) பிரிவு 65 C
(C) பிரிவு 65 D
(D) பிரிவு 65 E

54. Which Section deals with public documents?

(A) S. 73
(B) S. 74
(C) S. 75
(D) S. 76

எந்த பிரிவு பொது ஆவணங்களைப் பற்றி குறிப்பிடுகிறது?

(A) பிரிவு 73
(B) பிரிவு 74
(C) பிரிவு 75
(D) பிரிவு 76

55. Section 75 deals with ————

(A) Private documents
(B) Public documents
(C) Certified copy
(D) Court documents

பிரிவு 75 குறிப்பிடுவது

(A) தனியர் ஆவணங்கள்
(B) பொது ஆவணங்கள்
(C) சான்றொப்பமிட்ட நகல்
(D) நீதிமன்ற ஆவணங்கள்

56. Who is authorised to give certified copies of public documents?

(A) Public Officer
(B) Private Officer
(C) Law Officer
(D) Judicial Officer

பொது ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்கும் அதிகாரம் படைத்த நபர் யார்?

(A) பொது அலுவலர்
(B) தனி அலுவலர்
(C) சட்ட அலுவலர்
(D) நீதித்துறை அலுவலர்

57. Which of the following sections deals with presumptions as to documents?

(A) S. 75–90 (B) S. 79–90 A

(C) S. 79–90 (D) S. 79–90 B

பின்வரும் எந்த பிரிவுகள் ஆவணங்கள் குறித்த அனுமானத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது?

(A) பிரிவு 75–90 (B) பிரிவு 79–90 A

(C) பிரிவு 79–90 (D) பிரிவு 79–90 B

58. Presumptions as to Gazettes in electronic forms comes under which section?

(A) S. 79 (B) S. 80

(C) S. 81 (D) S. 81 A

மின்னணு வடிவத்தில் உள்ள அரசிதழ்கள் குறித்த அனுமானம் எந்த பிரிவின் கீழ் வருகிறது?

(A) பிரிவு 79 (B) பிரிவு 80

(C) பிரிவு 81 (D) பிரிவு 81 A

59. Presumptions as to documents thirty years old deals with which section?

(A) S. 89 (B) S. 79

(C) S. 90 (D) S. 99

முப்பது ஆண்டுகள் பழமையான ஆவணங்கள் குறித்த அனுமானம் எந்த பிரிவின்கீழ் வருகிறது?

(A) பிரிவு 89 (B) பிரிவு 79

(C) பிரிவு 90 (D) பிரிவு 99

60. Which of the following sections deals with the exclusions of oral evidence by documentary evidence?

(A) S. 90–99 (B) S. 90–100

(C) S. 91–100 (D) S. 91–101

பின்வரும் எந்த பிரிவுகள் ஆவணச் சாட்சியம் வாயிலாக வாய்மொழிச் சாட்சியம் விலக்கப்படல் பற்றி குறிப்பிடுகிறது?

(A) பிரிவு 90–99 (B) பிரிவு 90–100

(C) பிரிவு 91–100 (D) பிரிவு 91–101

61. The Evidence Act S. 91 which give how many exceptions?

(A) One (B) Two

(C) Three (D) Four

சாட்சிய சட்டம் பிரிவு 91 எத்தனை விதிவிலக்குகளை குறிப்பிடுகிறது?

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) நான்கு

62. Which section deals with the exclusion of evidence of oral agreement?

(A) S. 92 (B) S. 93

(C) S. 94 (D) S. 95

வாய்மொழி உடன்பாட்டின் சாட்சியம் விலக்கப்படல் பற்றி குறிப்பிடும் பிரிவு எது?

(A) பிரிவு 92 (B) பிரிவு 93

(C) பிரிவு 94 (D) பிரிவு 95

63. Who may give evidence of agreement varying terms of documents?

(A) Client

(B) Advocate

(C) Persons who are not parties to a document

(D) Persons who are parties to a document

ஆவணத்தின் நிபந்தனை வாசகங்களை மாற்றியமைக்கும் உடன்பாடு பற்றி யார் சாட்சியம் அளிக்கலாம்?

(A) கட்சிக்காரர்

(B) வழக்குறைஞர்

(C) ஆவணத்தின் தரப்பினர்களாக இல்லாதவர்கள்

(D) ஆவணத்தின் தரப்பினர்கள்

64. Part III of the evidence Act which includes how many chapters?

(A) Four (B) Five

(C) Six (D) Seven

சாட்சிய சட்டத்தின் பகுதி மூன்று எத்தனை அத்தியாயங்களை உள்ளடக்கியது?

(A) நான்கு (B) ஐந்து

(C) ஆறு (D) ஏழு

65. S. 101–114 A Evidence Act deals with which of the following subjects?

(A) Burden of proof
(B) Estoppel
(C) Witnesses
(D) Examination of witnesses

சாட்சிய சட்டத்தின் பிரிவு 101-114 A பின்வரும் எந்த பொருளைப் பற்றிக் குறிப்பிடுகிறது?

(A) மெய்ப்பிக்கும் சுமை
(B) முரண்தடை
(C) சாட்சிகள்
(D) சாட்சிகளின் விசாரணை

66. Birth during marriage is a

(A) Conclusive proof
(B) May presume
(C) No Presume
(D) None of the above

மணவாழ்வில் பிறந்த மகவு ஒரு

(A) அறுதியான சான்று
(B) அனுமானிக்கலாம்
(C) அனுமானம் இல்லை
(D) மேற்கண்ட எதுவுமில்லை

67. Which section deals with presumption as to absence of consent in certain prosecutions for rape?

(A) S. 114
(B) S. 114 A
(C) S. 114 B
(D) S. 114 C

கற்பழிப்பிற்கான சில அரசுத் தரப்பு வழக்குகளில் இசைவு இல்லாமைக் குறித்த அனுமானம் பற்றிய பிரிவு எது?

(A) பிரிவு 114
(B) பிரிவு 114 A
(C) பிரிவு 114 B
(D) பிரிவு 114 C

68. Which section deals with Estoppel?

(A) S. 114
(B) S. 115
(C) S. 116
(D) S. 117

முரண்தடையினைப் பற்றிக் குறிப்பிடும் பிரிவு எது?

(A) பிரிவு 114
(B) பிரிவு 115
(C) பிரிவு 116
(D) பிரிவு 117

69. Who is incompetent to testify?

(A) Tender years (B) Extreme old age

(C) Disease whether of body or mind (D) All the above

யார் சாட்சியம் அளிக்க தகுதியற்றவர்?

(A) இளம் வயது (B) முதுமுப்பு நிலை

(C) உடல் அல்லது மனரீதியில் நோய் (D) மேற்கண்ட அனைத்தும்

70. Witness unable to communicate verbally is called as

(A) Blind witness (B) Deaf-mute witness

(C) Ortho witness (D) All the above

வாய்மொழியாக வெளிப்படுத்த இயலாத சான்றுரைஞரை எவ்வாறு அழைப்பது?

(A) குருடர் சாட்சியம் (B) செவிட்டுமை சாட்சியம்

(C) ஊனமுற்றோர் சாட்சியம் (D) மேற்கூறிய எதுவுமில்லை

71. Which section deals with professional communications?

(A) S. 123 (B) S. 124

(C) S. 125 (D) S. 126

தொழில் முறையிலான செய்திகளைப் பற்றி குறிப்பிடும் பிரிவு எது?

(A) பிரிவு 123 (B) பிரிவு 124

(C) பிரிவு 125 (D) பிரிவு 126

72. Accomplice evidence is stated under

(A) S. 130 (B) S. 131

(C) S. 132 (D) S. 133

உடன் குற்றம் சாட்டப்பட்டவர் சாட்சியம் பற்றி கூறும் பிரிவு

(A) பிரிவு 130 (B) பிரிவு 131

(C) பிரிவு 132 (D) பிரிவு 133

73. The Evidence Act prescribes how many number of witnesses required for the proof of facts?

(A) No specific number of witnesses
(B) Five witnesses
(C) Ten witnesses
(D) Fifteen witnesses

ஒரு பொருண்மையினை நிரூபிக்க எத்தனை சாட்சியங்கள் வேண்டும் என்று சாட்சிய சட்டம் வரையறுத்துள்ளது?

(A) இத்தனை சாட்சியங்கள் என்று குறிப்பிடப்படவில்லை
(B) ஐந்து சாட்சியங்கள்
(C) பத்து சாட்சியங்கள்
(D) பதினைந்து சாட்சியங்கள்

74. Examination of witnesses

(A) S. 135 (B) S. 136
(C) S. 137 (D) S. 138

சாட்சிகளின் விசாரணைப் பற்றிக் குறிப்பிடும் பிரிவு

(A) பிரிவு 135 (B) பிரிவு 136
(C) பிரிவு 137 (D) பிரிவு 138

75. When leading question may be asked?

(A) Chief examination (B) Cross examination
(C) Re-examination (D) All the above

எப்பொழுது விடைபொதி வினாக்களை கேட்கப்படலாம்?

(A) முதல் விசாரணையில் (B) குறுக்கு விசாரணையில்
(C) மறு விசாரணையில் (D) மேற்கண்ட அனைத்தும்

76. Indecent and Scandalous questions are discussed under

(A) S. 149 (B) S. 150
(C) S. 151 (D) S. 152

இழிவான மற்றும் அவதூறான வினாக்கள் பற்றி குறிப்பிடும் பிரிவு

(A) பிரிவு 149 (B) பிரிவு 150
(C) பிரிவு 151 (D) பிரிவு 152

77. Questions by party to his own witness

(A) S. 151 (B) S. 152

(C) S. 153 (D) S. 154

தமது சொந்த சான்றுரைஞரையே தரப்பினர் வினாக்கள் கேட்டல் பற்றிய பிரிவு

(A) பிரிவு 151 (B) பிரிவு 152

(C) பிரிவு 153 (D) பிரிவு 154

78. Impeaching the credit of witness

(A) S. 155 (B) S. 154

(C) S. 153 (D) S. 152

சான்றுரைஞர்களின் நாணயத்தைப் பழித்தல் குறித்த பிரிவு

(A) பிரிவு 155 (B) பிரிவு 154

(C) பிரிவு 153 (D) பிரிவு 152

79. S. 159 of the Evidence Act deals with

(A) Refreshing memory (B) Hostile witness

(C) Approver (D) Accomplice

சாட்சிய சட்டத்தின் பிரிவு 159 குறிப்பிடுவது

(A) நினைவை புதுப்பித்தல் (B) பிறழ் சாட்சி

(C) குற்றமேற்பவர் (D) உடன் குற்றவாளி

80. Which Section deals with power of Jury or assessors to put questions?

(A) S. 166 (B) S. 167

(C) S. 165 (D) S. 164

சான்றாயம் (அ) மதிப்பீட்டாளர் வினாக்களாகக் கேட்கும் அதிகாரம் பற்றிய பிரிவு எது?

(A) பிரிவு 166 (B) பிரிவு 167

(C) பிரிவு 165 (D) பிரிவு 164

129/DD/20

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## THE CRIMINAL JUDICIAL TEST PART – III THE INDIAN EVIDENCE ACT

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any FOUR of the following.**

எவையேனும் நான்கிற்கு விடையளிக்கவும். (4 × 5 = 20)

1. Examine the main principles of Golden Rules of the Law of Evidence.

   சாட்சிய சட்டத்தின் முக்கிய கருத்துக்கள் (அ) தங்க விதிகளைப் பற்றி ஆராய்க.

2. Discuss the opinion of experts.

   வல்லுநர்களின் கருத்துக்களைப் பற்றி விவாதிக்க.

3. Briefly explain the exclusion of oral by documentary evidence.

   ஆவணச் சாட்சியங்கள் வாயிலாக வாய்மொழி சாட்சியங்கள் விலக்கப்படல் பற்றி சுருக்கமாக விளக்குக.

4. Explain the Birth during marriage conclusive proof of legitimacy?

   மணவாழ்க்கையில் பிறந்த மகவு முறைப்படியானது என்பதற்கான அறுதிச் சான்று பற்றி விளக்குக.

5. Explain the accomplice evidence.

   உடன் குற்றம் சாட்டப்பட்டவர் சாட்சியம் பற்றி விளக்குக.

6. Discuss the provision relating to no new trial for improper admission or rejection of evidence.

   சாட்சியத்தை முறையற்ற வகையில் அனுமதித்தல் (அ) தள்ளுபடி பற்றிய பிரிவினை விவாதிக்க.